மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தேர்வைப் பொறுத்த வரை புகைப் படம் கேட்கிற முறை வந்தால், நல்லது தான். ஆள் மாறாட்டம் நடக்கிற கேஸ்கள் ஆங்காங்கு ஒன்றிரண்டு நடக்கின்றன. வேறு பல மாநிலங்களில் இது அதிகமாக நடக்கிறது. தேர்வுகளுக்கு அந்த முறை வந்தால், நிலைமையைச் செம்மைப்படுத்தப் பயன்படுவதாக இருக்கும். இப்போது அப்படிப் பட்ட ஆணைகள் எதுவும் பிறப்பிப்பதாக இல்லை.

Tamil Nadu Graduates Teachers' Association

* @ 9 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the **Minister for Education and Local Administration be pleased to state—**

(*a*) whether the Tamil Nadu Graduate Teachers' Association has represented to the Government during March-April, 1971 about refixation of their scales of pay;

(*b*) if so, whether the representation has been examined; and

(*c*) the action taken thereon ?

தமிழ்நாடு பட்டதாரிகள் ஆசிரியர்கள் சங்கம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம் தனது ஆசிரியர்களின் சம்பள வீதங்களை மறுநிர்ணயம் செய்யுமாறு 1971-ஆம் ஆண்டு மார்ச்சு-ஏப்ரல் திங்களில் அரசுக்கு முறையீடு ஏதும் செய்ததா ?

(இ) ஆமெனில், அந்த முறையீடு பரிசீலனை செய்யப்பட்டுள்ளதா ?

(உ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இத்தகைய கோரிக்கை வந்துள்ளது. நிதி நிலைமையை மனதில் கொண்டு இது பரிசீலனை செய்யப் பட்டு வருகிறது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: தலைவரவர்களே, இந்தக் கோரிக்கையின்மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களும், மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்களும் உறுதிமொழிகள் கொடுத் திருக்கிறார்கள். தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கத்தினர் இந்தக் கோரிக் கையை அரசாங்கம் அனுதாபத்துடன் கவனிக்கும் என்று காத்துக்கொண்டிருக் கிறார்கள். மீண்டும் அவர்கள் கோரிக்கையை அரசு பரிசீலிக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட தன் உரையிலே குறிப்பிட்டார்கள். பல கேடிகரி களாகப் பிரித்துத்தான் இரண்டாவது ஊதியக் குழு சிபாரிசு செய்திருக்கிறது. இதே "கேடிகரி" அடிப்படையில் இன்னும் பலர் வருகிறார்கள். ஒரு கேடிகரி யைப் பொறுத்த வரை, ஊதியத்தை உரிர்த்துகிற சூழ்நிலை ஏற்பட்டால், எல்லா கேடிகரிக்கும் உயர்த்த வேண்டுமென்ற சங்கடம் ஏற்படுகிறது.

@ Postponed from the List of Questions for 24th January 1972

29th January 1972]

நிதித்துறை இந்த ஆட்சேபணையை எழுப்பிக்கொண்டிருக்கிறது. இதில் வேறு என்ன செய்யலாம் என்று பரிசீலனை இருந்து வருகிறது. சங்கடங்கள் தீருகிற நிலைமை ஏற்பட்டால்தான், இதற்கு வழி காண முடியும்.

THIRU A. R. DAMODARAN : Sir, has any communication been sent by the Government saying that the consideration has been completed and that the demands of the Graduate teachers cannot be met ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படிப் பட்ட குறிப்பு எதுவும் அனுப்பப்பட்டதாகத் தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் கொடுக்க முடியும்.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர் கள் இந்தக் கோரிக்கை பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். அது மிகவும் நம்பிக்கையூட்டக்கூடிய பெருஞ்செய்தியாக இருக்கிறது. ஏனென்றால் இப்போது ஆசிரியர்கள் சமுகத்தில் ஒரு அரசு ஆணை கொடுக்கப்பட்டு அதிலே, கீழ்க்கண்ட ஆசிரியர்களின் ஊதியப் பிரச்சினை தீர்ந்து விட்டது, மறு பரிசீலனை செய்வதற்கு இடமேயில்லை என்று கூறி, அதில் முதலாவதாக இந்தப் பட்டதாரி ஆசிரியர்களின் பிரச்னை தீர்ந்து விட்டதாகவும் மறு பரிசீலனைக்கு இடமில்லை யென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதனால் அவர்கள் பெரிதும் மனம் நொந்துபோயிருக்கிறார்கள். இப்போது அந்தக் கோரிக்கை மறு பரிசீலனை செய்யப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிய செய்தியை மிக்க மகிழ்ச்சியோடு வரவேற்கத் தயாராயிருக்கிறோம் என்று சொல்லிக்கொள் கிறேன்.

MR. CHAIRMAN : Supplementaries must be short.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அனுப்பப்பட் டிருக்கிற அதனையும் இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அய்யர் சொன்னதையும், ஆக இரண்டையும் சேர்த்துப் பரிசீலிக்க அரசு தயாரா யிருக்கிறது.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : 25—12—1971 அன்றைய 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில், இந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு விட்டதாகவும், இதில் நியாயம் எதுவும் இல்லையென்றும் குறிப்பிட்டிருக்கிறது அந்த உத்தரவிலே, என்று போட்டிருக்கிறார்கள். ஆனால் அதைப்பற்றிக்கூடக் கவலையில்லை. மீண்டும் இதை அரசாங்கம் பரிசீலிக்கும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் ; அவர்களுக்கு நன்றி தெரிவித்து, விரைவிலே பரிசீலித்து, ஒரு நல்ல சாதகமான முடிவை அறிவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நன்றி தெரிவித்த பிறகு, மறுபடியும் என்னிடத்திலிருந்து பதில் எதிர்பார்ப்பது வேடிக்கையாக இருக்கிறது. நன்றி தெரிவித்ததற்கு அடையாளமாக, தொடர்ந்து எந்தவிதக் கிளர்ச்சியும் இல்லா மல் பார்த்துக்கொள்ள வேண்டியது பொறுப்புள்ளவர்கள் கடமையாகும்.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]